**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, மதுராந்தகம்**

**முன்னிலை:- திருமதி.N.வள்ளியம்மா, B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண் 1, மதுராந்தகம்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 512/2025**

| | |
|---|---|
| அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>ஜி1 மதுராந்தகம் காவல் நிலையம்<br>குற்ற எண். 82/2025<br>சட்ட பிரிவு. 4(1)(c), 4 (1) (a), 4(1)(A), 4(1)(i) TNP Act. | குற்றமுறையீட்டாளர் |
| /எதிரி/ | |
| A1-குமார், வயது.36, த/பெ.எக்ஸ்சேவியர்,<br>எண்.37, வனத்தசின்னப்பர் தெரு,<br>அருந்ததிபாளையம், தச்சூர் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>A2-ராஜா(எ)கிறிஸ்துராஜ், வயது.39,<br>த/பெ.ஆரோக்கியசாமி,<br>எண்.6, வனத்தசின்னப்பர் தெரு,<br>அருந்ததிபாளையம், தச்சூர் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். | எதிரிகள் |

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு ROC. No. 814/2020/RG/F1, Dt 07.04.2021 இன் படியான இவ்வழக்கின் விவரங்கள் கீழ்வருமாறு :-

| | |
|---|---|
| Name of the Court | Judicial Magistrate No. I, Madurantakam. |
| Name of the Judge | Tmt. N.Valliamma, B.Sc., B.l., |
| Date of Judgment | 17.06.2026 |
| Case Number along with CNR Number | CC. 512/2025<br>TNCG-15-002883-2025 |
| Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Madurantakam PS. |

<table>
<tr><td></td><td>Complainant</td></tr>
<tr><td>Name of the Accused</td><td>A1–குமார், வயது.36, த/பெ.எக்ஸ்சேவியர்,<br>A2–ராஜா(எ)கிறிஸ்துராஜ், வயது.39, த/பெ.ஆரோக்கியசாமி,<br>Accused</td></tr>
<tr><td>Date of Occurrence</td><td>16.02.2025</td></tr>
<tr><td>Date of complainant</td><td>16.02.2025</td></tr>
<tr><td>Period of Remand</td><td>16.02.2025,</td></tr>
<tr><td>Released on Bail</td><td>19.02.2025</td></tr>
<tr><td>Final Report in the Court</td><td>11.04.2025</td></tr>
<tr><td>Committal/Taken on File</td><td>02.12.2025</td></tr>
<tr><td>Questioning U/s.S.316</td><td>22.01.2026</td></tr>
<tr><td>Results on Challenge before Superior Courts</td><td>–</td></tr>
<tr><td>Chief Examination</td><td><table>
<tr><td>PW1</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>PW2</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>PW3</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>Examination U/s. 351(1)(b) BNSS</td><td>08.06.2026</td></tr>
<tr><td>Abscondence of an Accused</td><td>–</td></tr>
<tr><td>Grant of Stay</td><td>–</td></tr>
</table>

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 08.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பிற்காக திருமதி.M.நித்யா அரசு குற்றவியல் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருM.சதீஷ், திரு.K.தமிழரசு, திரு.S.மணிகண்டன், திரு.N.ஜெயகுமார், திரு.J.மாதவன், திரு.V.ராஜகுமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை

கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பகரும்.

## தீர்ப்புரை

**1.** இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

**2.** கடந்த 16.02.2025 ம் தேதி 18.15 மணியளவில் கீழவலம் பேருந்து நிறுத்தம் அருகே எதிரிகள் ஒன்று சேர்ந்து TN 19 X 6761 என்ற பதிவெண் கொண்ட TVS Sports இருசக்கர வாகனத்தில் அரசு அனுமதியின்றி 180 ML அளவு கொண்ட OLD CHEF BRANDY என்ற அரசு மதுபான பாட்டில்கள்–48 ஐ கடத்தி கொண்டு வந்தும், மதுபாட்டில்கள் விற்ற பணம் ரூ.500/– வைத்திருந்துள்ளார். எனவே எதிரிகள் மீது பிரிவுகள் 4(1)(c), 4 (1) (a), 4(1)(A), 4(1)(i) TNP Act ன் கீழ் தண்டிக்கப்படதக்கவர் என்று மதுராந்தகம் காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.** குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், வழக்கினை 02.12.2025 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றிருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் BNSS பிரிவு 230 ன் கீழ் குற்றப் பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து BNSS பிரிவு 274 ன் கீழ் எதிரிகளின் மீது பிரிவுகள் 4(1)(c), 4 (1) (a), 4(1)(A), 4(1)(i) TNP Act–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் குறித்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து காட்டி விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு BNSS பிரிவு 265–ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**4.** அதன்படி குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு

அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் 3 பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரை விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள்.1 மற்றும் சான்று பொருள்.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணம் அல்லது சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து BNSS பிரிவு. 351 (1) (b) ன் கீழ் 08.06.2026 ம் தேதியன்று எதிரிகளிடம் வினவிய போது அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

**6.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் போதுமான சாட்சியங்களுடன் தகு நிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**தீர்வு:-**

**7.** அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா. ஆ. 1 முதல் 8 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசுத் தரப்பால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்தார்.

**8.** இந்த வழக்கின் புகார்தாரான அ.சா.3 16.02.2025 ம் தேதி மதுராந்தகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் மதுபான விற்பனை நடப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அ.சா.1 மற்றும் 2 உடன் கீழவலம் பேருந்து நிறுத்தும் அருகே ரோந்து சென்ற போது, வழக்கின் எதிரிகள் கீழவலம் பக்கமிருந்து இருசக்கர வாகனத்தில் கோணி பையில் எதோ வைத்து கொண்டு வந்த இரண்டு நபர்கள் அவர்களை

கண்டவுடன் இருசக்கர வாகனத்துடன் தப்பி செல்ல முயன்றதாகவும், அவரை மடக்கி பிடித்து விசாரித்த போது, அவர்கள் மதுபான விற்பனையில் ஈடுபட்டு இருப்பது தெரியவந்ததாகவும், எதிரிகள் வைத்திருந்த கோணிப்பையை பரிசோதனை செய்து பார்த்ததில், அந்த கோணிப்பையில் 180 ML அளவு கொண்ட OLD CHEF Brandy என்ற அரசு மதுபான பாட்டில்கள்–48 விற்பனை செய்யும் நோக்கில் வைத்து கொண்டும் மற்றும் மதுபானம் விற்ற பணம் ரூ.500/–ம், TN 19 X 6761 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் வைத்திருந்தாகவும், இதை பற்றி விசாரித்ததில் எதிரிகள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அ.சா.1 மற்றும் 2 முன்னிலையில் வழக்கு சொத்துக்களை அ.சா.3 கைப்பற்றி வழக்கு பதிவு செய்ததாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**9.** இந்த வழக்கை பதிவு செய்தது முதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தது வரை அனைத்துமே காவல் துறையை சேர்ந்த அதிகாரிகள் மட்டுமே சாட்சியாக வந்துள்ளனர். எனவே இந்த வழக்கில் முக்கிய நிகழ்வான 16.02.2025ம் தேதி எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் தனிப்பட்ட சுதந்திரமான சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்பது தெரிய வருகிறது. எதிரிகளிடமிருந்து தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை. இந்த நிலையில் இந்த வழக்கின் எதிரிகள் தான் போலிஸாரை கண்டவுடன் தப்பி ஓடியவர்களா, எதிரிகளிடமிருந்து தான் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதா என்பதை முதல்நிலையாக அரசு தரப்பில் தனிப்பட்ட சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யவில்லை.

**10.** எதிரிகளை கைது செய்த பிறகு எதிரி குமாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக அரசு தரப்பில் ஒப்புதல் வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போலிஸாரிடம் எதிரி அளிக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தை BSA பிரிவு 23 (இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 25) ன் படி எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்த முடியாது. எனவே எவ்வித சுந்தந்திரமான சாட்சிகளும் இல்லாத நிலையில் எதிரி குமார் இந்த வழக்கில் காவல் துறையினர் முன்பு அளித்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலமானது ஏற்றுகொள்ள தக்க சாட்சியம் அல்ல. மேலும் எதிரி குமார் போலிசாரிடம் எவ்வித

தூண்டுதலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருந்தாலும் கூட அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை புதிய தகவலையோ பொருளையோ கண்டுபிடிப்பதற்கு மட்டுமே பயன்படுத்த முடியும். BSA பிரிவு 27 (இந்திய சாட்சிய சட்டதின் பிரிவு 27ன்) படி எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை, புதிய பொருண்மை எதுவும் எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கண்டறியப்படவில்லை. எனவே இந்த வழக்கில் எதிரிகள் அளித்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலம் இந்த வழக்குக்கு எந்த விதத்திலும் பயன்படவில்லை.

**11.** இந்த வழக்கை தொடர் விசாரணைக்கு எடுத்து கொண்ட அ.சா.3 ம் அவருக்கு கீழே பணிபுரியும் காவலர்களை தவிர வேறு யாரையும் அந்த சம்பவம் குறித்து சாட்சிகளாக அவர் விசாரிக்காதது, அந்த புலன் விசாரணையின் நம்பகத்தன்மையில் சந்தேகமே ஏற்படுகிறது. இந்நிலையில் விசாரணை அதிகாரி அவருக்கு புள்ளியல் தேவைப்படுவதால் பொய்யான ஒரு வழக்கை ஜோடித்து உருவாக்கியிருக்கிறாரா என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது. எனவே அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியத்திலிருந்து எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**12.** எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகள் இந்த வழக்கின் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. முடிவில் எதிரிகள் சட்டபிரிவு 4(1)(c), 4 (1) (a), 4(1)(A), 4(1)(i) TNP Act ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) of BNSS ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**13.** இவ்வழக்கில் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட பி.ஐ.47/2025 ன் படியான சொத்துகளான சான்று பொருள்.1 48 மதுபாட்டில்களில் உள்ள திரவத்தை கொட்டி அழித்த பின்னர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அந்த பாட்டில்களை அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது. மேலும் சான்று பொருள்.2 ஆன பணம் ரூ.500/−ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

**14.** எதிரியின் பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துதட்டச்சருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VALLIAMMA
Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.17 10:39:13 +0530

நீதித்துறை நடுவர் எண். 1
மதுராந்தகம்.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| List of Witness | Name of the Witness | Description |
|---|---|---|
| PW1 | மகாதேவன்/ 2 ம் நிலை காவலர் | Confession & Seizure witness |
| PW2 | சதிஷ்குமார் /2 ம் நிலை காவலர் | Confession & Seizure witness |
| PW3 | ராஜேந்திரன்/ காவல் உதவி ஆய்வாளர் | Investigating Officer |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| Exhibit No. | Description of the Exhibits | Proved by/ Attested by |
|---|---|---|
| Ex.P.1 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் | PW-1 |
| Ex.P.2 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையொப்பம் | PW-1 |
| Ex.P.3 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையொப்பம் | PW-2 |
| Ex.P.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் | PW-2 |
| Ex.P.5 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | PW-3 |
| Ex.P.6 | கைப்பற்றுதல் மகசர் | PW-3 |

| | | |
|---|---|---|
| Ex.P.7 | முதல் தகவல் அறிக்கை | PW–3 |
| Ex.P.8 | படிவம்–91 | PW-3 |

அரசு தரப்பு சான்று பொருள். 1 :– 48 மதுபாட்டில்கள்
அரசு தரப்பு சான்று பொருள். 2 :– ரூ.500/– பணம்

எதிரி தரப்பு சாட்சிகள் :– இல்லை
எதிரி தரப்பு சான்றாவணம் :– இல்லை
எதிரி தரப்பு சான்று பொருள் :– இல்லை

VALLIAMMA
Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.17 10:39:23 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மதுராந்தகம்.

**CC 512/2025**

**17.06.2026**

எதிரிகள் ஆஜர். தீர்ப்பு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகாததால் எதிரிகள் இதச பிரிவுகள் 4(1)(c), 4 (1) (a), 4(1)(A), 4(1)(i) TNP Act–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை u/s.271(1) of Bharathiya Nagarik Suraksha Sanhita, 2023 ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**JM No.I/MKM**